12th September 1959]

Photographic Camera Manufacturing Industry

* 361 *Q.*—SRI A. VEDARATHNAM : *கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் பதிலளிப்பாரா—*

மேற்கு ஜெர்மனி கம்பெனியுடன் கூட்டாக ஆரம்பிக்க இருக்கும் போட்டோ காமரா உற்பத்திச் சாலையை இம் மாநிலத்தில் நடத்த ஏதேனும் உத்தேசம் உண்டா? அதன் விவரம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : It is presumed that the hon. Member refers to the proposal for the establishment of a factory for the manufacture of raw photographic film. The question is under the consideration of the Government of India.

SRI A. VEDARATHNAM : *போட்டோ காமிராக்கள் செய்வதற்கு மேற்கு ஜெர்மனி கம்பெனியாரோடு சேர்ந்து ஒரு பாக்டரி இங்கு ஆரம்பிப்பதாக மத்திய அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதே, அதை நம்முடைய மாநிலத்தில் ஏற்படுத்த வேண்டும் என்று நம்முடைய அரசாங்கம் கேட்டுக்கொண்டதா? இம்மாதிரி தொழிற்சாலைகள் ஆரம்பிக்கின்ற நேரத்தில் ஒவ்வொரு மாநிலமும் கலந்தாலோசிக்கப்படுகிறதா மத்திய சர்க்காரால்? அப்படியிருந்தால் இந்த யோசனை நமக்கு வந்ததா? அதைப்பற்றி நம்முடைய அரசாங்கம் என்ன தெரிவித்திருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா?*

THE HON. SRI R. VENKATARAMAN : *காமிராவைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். நாங்கள் போட்டோக்ராபிக் பிலிம்மைப்பற்றி பதில் சொல்லி விட்டோம். இது என்னுடைய தவறு. காமிராக்கள் "மானுபாக்சர்" செய்வதைப்பற்றி எங்களிடம் தகவல் இல்லை.*

MR. SPEAKER : *பிலிம்மைப்பற்றிய அடுத்த கேள்வியையும் எடுத்துக்கொள்ளலாம்.*

Raw Film Factory.

* 362 Q.—SRI N. K. PALANISAMI :
SRI A. VEDARATHNAM :
SRI P. G. MANICKAM :
SRIMATHI T. N. ANANDANAYAKI :
SRI N. MARUDACHALAM : } **Will the Hon.**
the Minister for Industries be pleased to state the present stage of constructing a raw film factory at Ooty?

THE HON. SRI R. VENKATARAMAN : The question is under the consideration of the Government of India.

SRI N. K. PALANISAMI : *ரா பிலிம் பாக்டரியை நீலகிரியில் வைப்பதா, அல்லது வேறு இடத்தில் வைப்பதா, சர்க்காரே நடத்துவதா, அல்லது சர்க்கார் பங்கு போட்டு நடத்துவதா என்ற*

[12th September 1959

பிரச்னைகளினால் இது துவக்கப்படாமல் தாமதப்படுகிறதா? அல்லது வேறு விஷயங்களினால் இதில் ஒரு முடிவு எடுக்கத் தாமதம் ஏற்படுகிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : கிழக்கு ஜெர்மனியிலிருந்து அவர்களுடைய உதவியைக்கொண்டு இதை வைப்பதாக முதலிலே யோசனை இருந்தது. இப்பொழுது அது சாத்தியம் இல்லை என்று தெரிகிறது. ஆகவே, வேறு நாட்டிலிருந்து இதை வைப்பதற்கான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

SRI P. G. MANICKAM : சினிமா தொழிலுக்காக கச்சா பிலிம் அதிகம் தேவை என அனேகம் தடவை சினிமா சம்பந்தப்பட்ட அஸோஸியேஷன் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கின்றது. ஆனால், இந்தத் தொழிற்சாலை ஏற்படுத்துவது கடந்த இரண்டு வருஷங்களாக தாமதப்பட்டுக்கொண்டு வருகிறது. ஆகையால், கூடிய சீக்கிரம் ஏற்படுத்துவதுபற்றி மத்திய சர்க்காருக்கு நமது சர்க்கார் கடிதப் போக்குவரத்து நடத்திற்று என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதெல்லாம் நுட்பமான இயந்திரங்கள். நாம் எவ்வளவு அவசரமாக வைக்கவேண்டுமென்று விரும்புகிறோமோ அவ்வளவு அவசரமாகக் கிடைப்பதில்லை. கிடைக்கும்போதுதான் வைக்க முடியும்.

SRI A. VEDARATHNAM : கிழக்கு ஜெர்மனியோடு சேர்ந்து இந்த பிலிம் உற்பத்தி செய்யலாம் என்று நாம் ஏற்படுத்த முடியாது போனாலும், மேற்கு ஜெர்மனியிலிருந்து 'ஆபர்' நம்முடைய சர்க்காருக்கு வந்ததே, அவர்கள் உதவியைக்கொண்டு இந்த பிலிம் தொழிற்சாலையை நம்முடைய மாநிலத்தில் ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : மேற்கு ஜெர்மனியிலிருந்து பிலிம் பாக்டரி வைப்பதற்காக எந்தவிதமான ஒரு ஆலோசனையும் வரவில்லை.

SRI N. MARUDACHALAM : அந்தத் தொழிற்சாலையை நீலகிரியில் வைக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். எந்த தேசம் நம்மோடு செய்வதற்கு ஒத்துழைக்க முன்வருகிறார்களோ அவர்கள் இடத்தையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து, அவர்கள் எந்த இடத்தில் வைத்தால் சரி என்று சொல்லுகிறார்களோ அங்கு வைக்கப்படும்.

Industrial Dispute (Madras Amendment) Act, 1949.

*363 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to re-enact the Industrial Dispute (Madras Amendment) Act, 1949 in accordance with assurance given by the Minister at the last Standing Labour Committee meeting?